மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், இராமேஸ்வரம்
OS.No. 5/2020

2023-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 21-ம் நாள் இந்திய ஆணையுறுதி சட்டம் பிரிவு 3 மற்றும் 4-ன் படி வாதி/பிரதிவாதி என்பவரை சாட்சியத்தின் வாக்குமூலம் சத்தியபிரமாணம் செய்விக்கப்பட்டு விசாரிக்கப்பட்டார்.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | சிங்காராயன் (Pw2 ) | த/பெ. | : | |
| கிராமம் | : | | தாலுகா | : | |
| சமயம் | : | | ஜாதி | : | |
| வயது | : | | தொழில் | :: | |

நாள்.21.11.2023
வா.சா.2
குறுக்கு விசாரணை :

தாவா சொத்தின் சர்வே எண் தெரியுமா என்றால் தெரியாது. அந்த சொத்து ஆதியில் யாருக்கு பாத்தியப்பட்டது என்று தெரியுமா என்றால் தெரியவில்லை. தாவா சொத்தானது ஆதியில் சுப்புபிச்சைக்கு பாத்தியம் என்ற விபரம் தெரியுமா என்றால் தெரியாது. அவரது இறப்பிற்கு பிறகு அவரது மக்களான மாணிக்கவாத்தியார், அருளப்பன், ஞானபிரகாசம், நிலவேந்திரன், ராயப்பன் ஆகியோர்கள் அளசு அந்தோணிக்கு ஒத்தி வைத்துள்ளார்கள் என்றால் அது எனக்கு தெரியாது. அந்த ஒத்தியை மீட்கமுடியால் அளசு அந்தோணிக்கு கிரையம் கொடுத்துவிட்டார்கள் என்றால் அது எனக்கு தெரியாது. அதன்பிறகு 12.02.1951 ல் அளசு அந்தோணியின் பிள்ளைகள் பாகப்பிரிவினை ஏற்படுத்தியுள்ளார்கள் அது தெரியுமா என்றால் தெரியாது. அளசு அந்தோணி யார் என்று தெரியுமா என்றால் தெரியாது. அவருக்கு சந்தியாகப்பன், ஜெபமாலை, அருளானந்தம் என்று மூன்று மக்கள் இருக்கிறார்கள் என்றால் சரிதான் தெரியும். அந்த மூன்று நபர்களை நான் நேரில் பார்த்தது இல்லை. மூன்று நபர்களின் மக்கள்தான் 12.02.1951 ல் தாவா சொத்து உட்பட இதர சொத்துக்களை சேர்த்து பாகபிரிவினை பத்திரம் ஏற்படுத்தினார்கள் என்றால் தெரியும். அது பொய் பத்திரம். அதில் யார் யார் கையெழுத்து செய்தார்கள் என்று தெரியுமா என்றால் தெரியாது. பாகப்பிரிவினை பத்திரத்தில் சர்வே எண்.66 மற்றும் 77 ல் உள்ள 10 ஏக்கர் 74 செண்ட் நிலத்தை மூன்று மக்களும் மூன்று பாகங்களாக பிரித்துகொண்டார்கள் என்றால் அது

எனக்கு தெரியாது. அதனடிப்படையில் மூன்று மக்களுக்கும் தலா 3 ஏக்கர் 58 செண்டு என்று பிரித்து கொண்டார்கள் என்றால் எனக்கு தெரியாது. 1956ம் வருடம் எனது தாய்மாமன் மோட்சானந்தம் மற்றும் இன்னாசிமுத்து அவர்கள் 2 ஏக்கர் 15.33 இடத்தை கிரையம் பெற்றதாக சொல்லியுள்ளேன். ஆனால் யாரிடமிருந்து கிரையம் பெற்றதாக சொல்லவில்லை என்றால் சரிதான். மேற்படி முதல்விசாரணை வாக்குமூலம் பாரா 3ல் கிரைய பத்திரத்தில் எனது தாத்தா ஜெபமாலைக்கு ஒரு பங்கும், சாயா ஜெபமாலைக்கு ஒரு பங்கு நீக்கியும், ஒரு பங்கை மோட்சானந்தம், இன்னாசிமுத்து ஆகியோர்கள் கிரையம் பெற்றுள்ளதாக சொல்லப்பட்டுள்ளதில் அந்த விபரங்கள் எதையும் கிரையப்பத்திரத்தில் சொல்லவில்லை என்றால் சரிதான். அந்த பத்திரத்தில் முன்பு சொத்து யாருக்கு பாத்தியப்பட்டது, எப்படி வந்தது எதுவும் சொல்லவில்லை என்றால் எனக்கு படிக்க தெரியவில்லை. வழக்கு சொத்தின் விஸ்தீரணம் மற்றும் நான்குமால் தெரியுமா என்றால் தெரியாது. வாதியின் அப்பா இன்னாசிமுத்து மற்றும் மோட்சானந்தம்,கிளாஸ்சியஸ் எனக்கு தாய்மாமன்கள் என்றால் சரிதான். எனது தாயாருடன் பிறந்தவர்கள். எனக்கு வயது தற்போது 74. நான் பிறந்த வருடம் எனக்கு தெரியாது. வா.சா.ஆ.1 பத்திரம் ஏற்படுத்திய விபரம் எனக்கு நேரடியாக தெரியாது என்றால் சரிதான். அந்த வா.சா.ஆ.1 பத்திரம் ஏற்படுத்தியது யார் சொல்லி எனக்கு தெரியும் என்றால் தெரியவில்லை. எனக்கு வா.சா.ஆ.1 பத்திரம் பற்றி நேரடியாக தெரியாது என்பதால் மோட்சானந்தம் மற்றும் இன்னாசிமுத்துவிற்கு தலா 1 ஏக்கர் 7.5 செண்டும், மேலும் ஆ.ஜெபமாலை வழியில் மேற்படி இன்னாசிமுத்துவிற்கு 30.76 செண்டும் என்னால் குறிபிட்டு சொல்லமுடியாது என்றால் சரிதான். ஜெபமாலையின் வாரிசுகள் ஏழு நபர்கள் என்றால் சரிதான். அதில் 2 நபர்கள் இறந்துவிட்டார்கள். 2 ஏக்கர் 15.73 செண்டை 5 பங்காக போடமுடியும் என்றால் சரிதான். தாவா சொத்தானது 1 முதல் 6 பிரதிவாதிகளின் பெயரில் பட்டா ஏற்பட்டு தனிதனியாக அவர்கள் அனுபவத்தில் உள்ளது என்றால் சரிதான். வாதி என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் பட்டா ரத்து செய்யக்கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளார். நான் தாக்கல் செய்த நிரூபண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள விபரங்கள் யார் சொன்னது என்றால் நான்தான் சொன்னேன். பொதுவாக தகப்பனார் இறந்துவிட்டார் அவரின் வாரிசுகள் அனைவரும்

சேர்ந்துதான் சொத்தை அனுபவம் செய்யமுடியும் என்றால் சரிதான். இன்னாசிமுத்துவின் வாரிசுகளான வாதியை தவிர மற்ற வாரிசுகளும், மோட்சானந்தம் அவர்களின் அனைத்து வாரிசுகளும் சேர்ந்து வழக்கை தாக்கல் செய்யாததால் மேற்படி வாதி தாக்கல் செய்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல. மேற்படி நபர்கள் வாதிக்கு பவர் வழங்கவில்லை என்றால் சரிதான். எனது தாயார் மரிய கிரிதாள், மரிய கிரேஸ் என்பவருக்கு 30.76 செண்ட் பிரிக்கப்படாத சொத்தாக இருப்பதால் பாகபிரிவினை வழக்கு தாக்கல் செய்யாமல் வாதிக்கு தனிப்பட்ட முறையில் கிரையம் செய்து கொடுத்திருக்கமுடியாது என்றால் சரிதான். பிரதிவாதி மோசடியாக பெற்ற பட்டாக்களை ரத்து செய்ய கோரி வாதி எங்கு மனு கொடுத்துள்ளார் என்றால் அது எனக்கு தெரியாது. 10.05.1999 ம் தேதி பரதலோமைக்கு பாத்தியப்பட்ட தாவா சொத்தின் ஒரு பகுதியான 1 ஏக்கர் 76 1/2 செண்டில் 10 செண்டை மட்டும் இராமேஸ்வரம் காமராசர் நகரை சார்ந்த டேவிட் மகன் ராஜன் என்பவருக்கு வாதி அடமானம் வைத்துள்ளார் என்றால் அது கள்ளப்பத்திரம் என்றால் சரியல்ல. அது ரிஜிஸ்டர் பத்திரம் என்றால் இல்லை. அதை 13.03.2000 ம் வருடத்தில் திருப்பிவிட்டார் என்றால் அதுவும் பொய் பத்திரம். 1951 ல் இருந்து 10.05.1999 வரை மற்றும் 13.03.2000 முதல் தற்போதுவரை தாவா சொத்து உட்பட இதர 1 ஏக்கர் 76 1/2 செண்டை 1 முதல் 6 பிரதிவாதிகள் தன்கைவசம் வைத்து வேலி கம்பி அடைத்து பட்டா மாற்றி அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரிதான். சட்ட காலத்திற்கு மேலாக இந்த பிரதிவாதிகள் தாவா சொத்து உட்பட இதர சொத்துக்களையும் அனுபவம் செய்து வருகிறார்கள் என்றால் சரியல்ல. 1 முதல் 6 பிரதிவாதிகள் தாவா சொத்து உட்பட இதர சொத்துக்களை அடைத்து வைத்துள்ள விபரம் எனக்கு தெரிந்தும் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. வாதி கோரியுள்ள பரிகாரம் கிடைக்கத்தக்கதல்ல என்றால் சரியல்ல.